SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் – 2020-2021 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க பணியாளர்களுக்கு வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

======================================================

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூச-2)துறை**

அரசாணை (ப) எண்.37 நாள்: 01.11.2021

பிலவ வருடம், ஐப்பசி- 15,
திருவள்ளுவர் ஆண்டு 2052

**படிக்க**

1. அரசாணை(நிலை) எண்.235, நிதித்துறை, நாள் 23.10.2021.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க.எண்.3595/2020/ ஆ3(2), நாள் 25.10.2021.

------

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2020-2021-ஆம் ஆண்டிற்கான, 2021-2022 ஆண்டில் வழங்கப்படக்கூடிய மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை குறித்த ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. இவ்வரசாணை நேரடியாக பொருந்தாவிடினும், இதனை பின்பற்றி, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் போனஸ் சட்டத்தின்கீழ் வரும் முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மற்றும் போனஸ் சட்டத்தின்கீழ் வராத சங்கங்களில் பணியாற்றும் 1036 பணியாளர்களுக்கு, அந்தந்த சங்கங்கங்களின் நிதியிலிருந்து, 2020-2021 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகையாக (Ex-gratia) ரூ.37,98,717/-ஐ வழங்குவதற்கு ஆணை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டார்.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் மேற்கண்ட கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது.

2020-2021-ஆம் ஆண்டிற்கு, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்டுள்ள ஆணையின் அடிப்படையில், உபரி தொகையுடன் இலாபம் ஈட்டியுள்ள அல்லது ஈட்டாத அனைத்து முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பணியாற்றும் 261 எண்ணிக்கையிலான 'C' மற்றும் 'D' வகை பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகையும், மேலும் போனஸ் சட்டத்தின் கீழ் வராத முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பணிபுரிந்து வரும் 775 பணியாளர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.2,400/- வீதமும் அந்தந்த சங்க நிதியிலிருந்து வழங்க கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை, நிதி (பொ. மா.க)த் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.47516/நிதி(பொ.மா.க)/2021, நாள்.27.10.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹிதேஸ் குமார்எஸ்.மக்வானா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி), சென்னை-7.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதித் (பொ.மா.க.) துறை, சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (CC.1)துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அ.ந.மு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்